# சம்மாந்துறை கல்வி வலயமும் விளையாட்டுத்துறையும்


**C.M. தௌபீக். B. Ed.**

Dip. in (Phy.Ed) , Dip. in (Sp.Ed) Dip. in (O.A) ,
Dip. in (E.M) ,Dip. in (HRD),

ஆசிரியர்
சது / முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயம்
(தேசியபாடசாலை)
சம்மாந்துறை.


2008 07 11

**சம்மாந்துறை வலயத்தில் உள்ள பாடசாலைகள் ஏன் விளையாட்டில் திறமைகாட்டக்கூடாது என்பதற்கான காரணத்தை அறிய முற்படுகின்ற போது?**

சம்மாந்துறை கல்விவலயமானது அண்மைக்காலமாக விளையாட்டுத்துறையில் மிகவும் பின்னடைவு கண்டு வருகின்றமையை எம்மனைவராலும் உணரக்கூடிய ஒன்றாக காணப்படுகின்றது. விளையாட்டுத்துறை என்பது ஏனைய பாடரீதியான செயற்பாடுகளுக்கு அப்பால் வெளிப்படையாக அம்பலத்தில் திறமைகளை வெளிக்காட்டி அதன்மூலம் பார்வையாளர்கள், பாடசாலை, பெற்றோர் ஏன் நாடு என்ற ரீதியில் தங்களது நாமத்தை வெளிக்காட்டுகின்ற ஒரு துறையாக உள்ளது.

இவ்வாறான விளையாட்டுத்துறைக்குத் தேவையான மாணவச்செல்வங்களை எமது வலயத்தில் காணப்படுகின்ற 65 க்கு மேற்பட்ட பாடசாலைகளிலும் 60க்கு மேற்பட்ட உடற்கல்வி ஆசிரியர்கள் மூலமும் ஏன் விருத்தி செய்ய முடியாது என்பது மறைக்கப்பட்ட ஒரு விடயமாகவே உள்ளது.

இதனை நிவர்த்தி செய்வதற்கு என்னால் முன்வைக்கப்படுகின்ற தனிப்பட்ட ரீதியான சில பணிவான கருத்து வெளிப்பாடுகள்.

- எமது வலயத்திற்கு விளையாட்டுத்துறைக்குரிய மிகவும் பொறுப்புள்ள திறமையான திட்டமிட்டு வழிப்படுத்துகின்ற ஒரு உடற்கல்வி உதவிப்பணிப்பாளர், இரு உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்படாமை.
- பயிற்சிகளை முடித்துக்கொண்டு உடற்கல்வி ஆசிரிய நியமனம் பெற்றவர்கள் தாங்கள் உடற்கல்வி ஆசிரியர்கள்தானா என்பதை மறந்த நிலையில் செயற்படுகின்றமை.
- பாடசாலைகளில் விளையாட்டு ஆசிரியர்கள் இருக்கின்ற போது விளையாட்டுத்துறை சார்ந்த பொறுப்புக்களை வேறு பாட ஆசிரியர்களிடம் ஒப்படைத்துவிட்டு உடற்கல்வி ஆசிரியரை ஓரங்கட்டுகின்றமை.
- வலயக்கல்விப்பணிப்பாளரின் தலைமையின் கீழ் வலயக்கல்வி அலுவலக ADE, ISA, (Phy.ED) போன்றவைகளைக் கொண்டு உடற்கல்வி ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்களையும், கடமைகளையும் நன்றாக வெளிப்படுத்தாமை.

* வலயக்கல்வி அலுவலகத்தினூடாக நிதி நிலை இல்லாத பாடசாலையின் விளையாட்டு அபிவிருத்திக்கு ஊக்குவிப்பு வழங்காமை.

* கட்டாயமாக ஒவ்வொரு பாடசாலைகளும் வருடத்திற்கான இல்ல விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு வழிப்படுத்தாமை.

* போட்டிகளில் திறமைகாட்டிய மாணவர்களுக்கான பொதுவான பயிற்சிப்பாசறைகளை ஏற்படுத்தி மாணவர்களின் அடைவுமட்டத்தை மேலும் முன்னேற்ற உதவாமை.

* போட்டிகளில் திறமை காட்டும் மாணவர்கள் கல்வியில் சில நேரம் பின்னடைந்தவர்களாக காணப்படுவர். அம்மாணவர்களின் கல்விக்கு உதவுவதற்கான ஏற்பாடுகளை செய்யாமை.

* வலயக்கல்வி அலுவலகத்தினூடாக Phy. ADE, ISA, போன்றவர்களால் விளையாட்டுத்துறை சட்டதிட்டங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களைப்பற்றிய கலந்துரையாடல்களையும் பயிற்சி முறைகளையும் தெளிவுபடுத்தாமை.

* சிறந்த பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலைக்கழகங்கள், என்பவற்றை உருவாக்குவதற்கு நிர்ப்பந்திக்காமை.

* பாடசாலையில் 15 நிமிட இசைமூலமான பயிற்சியை விருத்தி செய்யாமை.

* போட்டிகளின் போது காணப்பட்டு வந்த உடற்பயிற்சிக்கண்காட்சி, அணிநடை, கடேட் போன்றவைகளுக்கு புத்துயிர் அளிக்காமை.

* மைதான வசதியில்லா பாடசாலைகள் அண்மையில் உள்ள மைதான வசதியையுடைய பாடசாலைகளின் உதவியுடன் விளையாட்டில் பங்குபற்றச்செய்யத் தேவையான ஆலோசனைகள் இல்லாமை.

* பாடசாலைகளில் இல்லாத அல்லது அறமுகமில்லாத விளையாட்டுக்களை அறிமுகப்படுத்தி அதற்கான வளங்கள் வழங்கப்படாமை

* வளப்பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளுக்கு தேவையாள விளையாட்டு உபகரணங்களை இனம்கண்டு வழங்காமை.

* திறமையான மாணவர்களை இனங்கண்டு அவர்களை ஊக்கப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்காமை.

* பொறுப்பு வாய்ந்த பாடசாலைத் தலைமைகள் விளையாட்டுத்துறையில் உள்ள குறைவான நாட்டம்.

* ஒவ்வொரு பாடசாலையில் இருந்து கட்டாயமாக பாடசாலை மட்ட கோட்டமட்ட, வலயமட்ட, போட்டிகளுக்கு மாணவர்கள் பங்குபற்றத்தேவையான கண்டிப்பான கட்டளைகள் இடப்படாமை.

* பாடசாலைகளில் உள்ள விளையாட்டு ஆசிரியர்கள் ஏன் மாணவர்களை விளையாட்டில் ஈடுபடுத்தவில்லை என்பதை விசாரணைகள் மூல தெரிந்து கொள்ளாமை.

* விளையாட்டுப்போட்டிகளில் ஈடுபடுகின்ற போட்டியாளர்களின் சான்றிதழ்கள் உரிய கால நேரத்தில் வழங்கப்படாமை.

* விளையாட்டுத்துறை சார் பயிற்சிகளைப் பெற்ற ஆசிரியர்களை வேறு பாடம் கற்பிப்பதற்கு நியமிக்கப்பட்டமை.

* உடற்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் வேலைத்திட்டங்களை ஒழுங்குபடுத்தாமை.

* திறமையாக செயற்படுகின்ற உடற்கல்வி ஆசிரியர்களையும் அப்பாடசாலையையும் கௌரவப்படுத்தாமை.

* விளையாட்டைவிளையாட்டாவே நினைப்பதால் எல்லாம் மாற்ற விளையாட்டாக மாறி உள்ளமை.

* ஒவ்வொரு மட்ட விளையாட்டுப்போட்டியின் (பாடசாலை, உபவலயம் வலய, மாகாண அகில இலங்கை) தகவல்களை ஆவணப்படுத்தாமை

* வருட இறுதியின் ஒரு நாளில் விளையாட்டில் திறமைபடைத்த மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் உதவியாளர்களையும் சமூகத்தின் முன் வெளிப்படுத்தாமை

போன்ற காரணகளை சிறந்த முறையில் செயற்படுத்துகின்ற போது பல்வேறு வகையான நன்மைகளை அடையலாம். இதன் மூலம்

* வலயக்கல்வி பணிமனை நற்பெயரை அடையும்
* உடற்கல்வி ADE, ISA நற்பெயரை அடைவார்கள்
* பாடசாலைகள் நன்மையடையும்
* மாணவர்களின் திறமை வெளிக்காட்டப்படுவதுடன் மாணவர்கள் உற்சாகப்படுத்தப்படுவார்கள்
* உடற்கல்வி ஆசிரியர்கள் கௌரவப்படுத்தப்படுவார்கள்
* பெற்றார்களின் பங்களிப்பு கிடைக்கும்
* சமூகத்தின் பங்களிப்பு கிடைக்கும்
* வளங்கள் இல்லாத பாடசாலைகள் இனங்காணப்படும்
* வளப்பகிர்வு நடைபெறும்
* தேவைகளும் திறமைகளும் கண்டறியப்படும்
* திறமையானவர்களை சமூகம் பாராட்டும்.

இவற்றினூடாக விளையாட்டு அபிவிருத்தி அடைந்து அது முழு உலகிற்கும் எமது வலயத்தை வெளிச்சமிட்டுக்காட்டுவதற்கு ஏதுவாகும் என்பதை நாம் மறந்துவிடமுடியாது அதறடகாக உங்களது பூரண ஒத்துழைப்பு இருந்தால் இவை எல்லாம் மிக விரைவில் எமது காலடியில் சங்கமிக்கும்.

* இவற்றினை நடைமுறைப்படுத்துவதற்காக வேண்டி பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வது சாலப்பொருத்தமென நினைக்கின்றேன்.

* வலயத்திலுள்ள விளையாட்டு ஆசிரியர்களின் விபரத்திரட்டு ஒன்றைத்தயாரித்து அதனை சகல பாடசாலைகளுக்கும் வழங்குதல்

* விசேட திறமையுடைய (பயிற்றுவிக்கும் தன்மை உள்ள) ஆசிரியர்களை வலயத்தின் பிரதான வளவாளர்களாகப்பயன்படுத்துதல்

* சிறந்த பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை இனம் கண்டு அவர்களின் திறனை மேலும் வளர்ப்பதற்கான வழிகளை ஏற்படுத்தல்

* இவ்வாறான ஆசிரியர்களின் பாட வேளைகளை பயிற்றுவிக்கும் நேர ஒதுக்கீடாக மாற்றியமைத்தல்

* இவர்கள் வாராந்த அல்லது மாதாந்த பாசறைகளை நாத்துவதற்கும் அதன்மூலம் மாணவர்களுக்கு பயிற்சியளிக்க நடவடிக்கை எடுத்தல்

* ஒரே பாடசாலைகளில் கூடிய அளவு உடற்கல்வி ஆசிரியர்கள் காணப்பட்டால் உடற்கல்வி ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளுக்கு விடுவித்தல் அல்லது குறித்த தினங்களை ஒதுக்குதல்

* விளையாட்டு அபிவிருத்திக்குத்தேவையான வளங்களை அரசியற்பிரமுகர்கள் அல்லது வலயத்தினூடாக பெற்றுக் கொடுத்தல்.

* விளையாட்டு ஆசிரியர்களுக்கான இடர்பாடுகளை நிவர்த்தித்தல்

* காலை மாலை நேரங்களில் பயிற்சி வளங்குவதற்காக அவர்களுக்குரிய சலுகைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

* எந்த விளையாட்டுப்போட்டியினையும் குறைந்தது ஒரு வார காலத்திற்கு முன் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்

* ஒவ்வொரு பாடசாலையிலும் துறைசார் திறமையுள்ள உதாரணமாக (உதைபந்து, கரப்பந்து போன்ற )ஏனைய பாட ஆசிரியர்கள் காணப்பட்டால் அவர்களின் உதவியைப் பெறுதல்.

* வலயத்தினால் நடாத்தப்படும் போட்டிகளின் போது தேவையான அனைத்து வசதிவாய்ப்புக்களையும் வழங்குவதுடன் அதில் சிறப்பாக செயற்படுகின்ற ஆசிரியர்களையும் அதிபர்களையும் சான்றிதழ் வழங்கி கௌரவித்தல்

* வலயத்திலுள்ள அனைத்து உடற்கல்வி ஆசிரியர்களையும் ஒரு அமைப்பாக வலயம் வைத்துக் கொள்ளல்

மேற்போன்ற விடயங்களை கவனத்திற் கொள்வதுடன் முன்கூறப்பட்ட முறன்பாடுகளையும் மாற்றியமைப்பதன் ஊடாக எமது வலயத்தின் விளையாட்டு மேம்பாட்டினை விருத்தி செய்யலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை

**குறிப்பு** :- எதிர்வரும் கல்வியாண்டிற்கான விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறை ஆண்டின் வருட இறுதிப்பகுதியில் திட்டமிட்டு ஒழுங்கமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவது நன்று.